இலவச கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, 2016–2017 ஆம் ஆண்டிற்கான 'தாய்' திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்சமயம் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.*

திரு. டி.எ. ஏழுமலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த மனித தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு என் போன்ற சாதாரண அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கு எல்லாம் நல்வழி காட்டி நல்லரசு நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். பூந்தமல்லி தொகுதியில், கரிக்களவாக்கம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று கட்ட வேண்டுமென்று கேட்டு கோரிக்கை வைத்திருந்தேன். தற்போது அங்கன்வாடி மையம் கட்டும் பணி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

நூற்பாலை

***4816—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, கரிவலம்வந்தநல்லூரில் நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, கரிவலம்வந்தநல்லூரில் நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், அதன் அருகில் அமைந்திருக்கும் சங்கரன்கோவில் தொகுதியிலுள்ள பகுதிகளிலும் அதிகமாக பருத்தி விளைச்சல் இருக்கின்றது. அதைக் கருத்தில்கொண்டு, நான் கூறிய பகுதியில் ஓர் அரசு நூற்பாலையை அமைத்திட வேண்டும். அதற்குத் தேவையான அனைத்துவிதமான மூலப்பொருள்களும் அருகிலேயே கிடைக்கின்றன. இரண்டாவதாக, அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய மக்கள் நூற்பாலை வேலைக்காக, கிட்டத்தட்ட 38 கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாகப் பயணம் செய்து, ராஜபாளையம் மற்றும் அதன் அருகில் இருக்கக்கூடிய நூற்பாலைகளில் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனைக் கருத்தில்கொண்டு, வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் மையப் பகுதியில் கரிவலம்வந்தநல்லூரில் ஓர் அரசு நூற்பாலை அமைக்கும்பட்சத்தில் அந்தத் தொகுதியினுடைய மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் மொத்தமுள்ள 3,321 நூற்பாலைகளில் 1,998*

நூற்பாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள இந்த நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியைப் பொறுத்தவரையில், 5 சதவிகித அளவிற்குத்தான் இங்கு உற்பத்தியாகிறது. மீதம் 95 சதவீதம் பருத்தி வட மாநிலங்களில் இருந்துதான் கொள்முதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, பருத்தி உற்பத்தி தமிழ்நாட்டினுடைய தேவைக்குப் போதுமானதாக இல்லை. இந்தியாவில் உற்பத்தியாகும் நூல்களில் 45.65 சதவிகிதம் தமிழ்நாட்டில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; அதிக எண்ணிக்கையில் நூற்பாலைகள் இயங்கிவரும் மாநிலங்களில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டில் 1,998 நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் நான்கு இலக்கத்திலான எண்ணிக்கையில் நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்திலுள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் 224 நூற்பாலைகள் மட்டும்தான் இயங்கி வருகின்றன. எனவே, பருத்தி உற்பத்தியில் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் நடைபெற்ற ஆய்வின்போது, அடுத்த ஆண்டில், பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மானிய உதவிகளைக் கொடுத்து, அவர்களை ஊக்குவித்து, பருத்தி உற்பத்தியை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.

திரு. அ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதேசமயம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பெயரிலேயே 'எஸ்'–ம் இருக்கிறது; 'மணி'–யும் இருக்கிறது. அதைக் கருத்திற்கொண்டு, வருங்காலங்களில், எனது கோரிக்கையினை பரிசீலனை செய்து, தென் மாவட்டங்களில் ஒரு நூற்பாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2017 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான வேலைவாய்ப்புகளைக் கொடுக்கிற துறை கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆகும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான வேலைவாய்ப்புகளும் இந்தத் துறையில்தான் இருக்கின்றன. இந்தத் துறை தற்போது மிக மோசமாக நலிந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமான நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இன்றைக்கு அந்த நூற்பாலைகளின் கதி என்ன என்பது பற்றி உங்களுக்கே தெரியும். நமது மாநிலத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலைகளை கணக்கெடுத்துப் பார்த்தால், அவை நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது தெரியவரும். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் இயங்கிவரும் தனியார் நூற்பாலைகள் உட்பட அனைத்து நூற்பாலைகளையும் சீர் செய்ய, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, தனியாக ஒரு புதிய தொழில் கொள்கையை உருவாக்கி, அறிவிக்க முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துகள் உண்மைதான். அதற்கு பருவ கால மாற்றங்கள்தான் முழுமையான காரணம் ஆகும். 28,000/– ரூபாயாக இருந்த 356 கிலோ கொண்ட ஒரு கண்டி பருத்தி, தற்போது 48,000 ரூபாயாக உயர்ந்துவிட்டது. இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு கண்டிக்கு 20,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளபோதிலும்கூட, தொழிலாளர்களுக்கு*

முழுமையாக வேலைவாய்ப்பினைத் தர வேண்டும்; ஆலைகள் வேலைநிறுத்தமின்றி இயங்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல், நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, இந்தப் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. கேஎஸ். தென்னரசு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

வீடுகள் கட்டுதல்

***2870—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு, ஜீவானந்தம் சாலையிலுள்ள ஓடைப் பள்ளத்தின் வடபுறம் குடிசைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மறைந்தும், மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, ஜீவனாந்தம் சாலை ஓடைப்பள்ளம் பகுதியில் 250 குடும்பங்களைச் சார்ந்தவர்கள் குடிசைப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்கள். இத்திட்டப் பகுதியில், அனைவருக்கும் வீட்டு வசதி தொலைநோக்குத் திட்டத்தின்கீழ், 2,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் முடிவுற்றவுடன், ஜீவானந்தம் சாலையிலுள்ள ஓடைப்பள்ளத்தின் வடபுறம் குடிசைப் பகுதியில் வாழ்கின்ற 250 குடும்பங்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.